செய்தி வெளியீடு எண்: 54 நாள்: 12.09.2026

## மக்கள் மாளிகை, தமிழ்நாடு

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், தமிழ்நாடு ஆளுநர்அவர்களின் பத்திரிக்கை செய்தி

டெல்லியில் நடைபெறும் பிரிக்ஸ் உச்சி மாநாடு 2026 நிகழ்வுகளின் ஒரு பகுதியாக, ராமேஸ்வரத்தின் மகத்தான அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயில் உலக அரங்கில் சிறப்பாகக் காட்சிப்படுத்தப்படுவது, தமிழ்நாட்டிற்கும் ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் பெருமைமிகு தருணமாகும்.

தமிழ்நாட்டின் கட்டடக்கலை மேன்மை, கலைநயம் மற்றும் செழுமையான தொன்மையான நாகரிகப் பாரம்பரியத்தின் சிறப்புமிக்க சான்றாக இத்திருக்கோயில் திகழ்கிறது. அதன் பிரம்மாண்டமான திருச்சுற்றுப் பிரகாரங்களும், நுணுக்கமாகச் செதுக்கப்பட்ட 1,212 தூண்களும், நமது முன்னோர்களின் சிறந்த கைவினைத்திறனையும் கட்டடக்கலைப் பொறியியல் நுட்பத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ்நாட்டின் இப்பெருமைமிகு பாரம்பரியச் சின்னத்தை உலகிற்கு எடுத்துக்காட்டிய மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன். புதுமை, வளர்ச்சி மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பில் இந்தியாவின் முன்னேற்றங்களுடன், அதன் தொன்மையான நாகரிகப் பாரம்பரியத்தையும் உலக அரங்கில் முன்னிறுத்துவது பாராட்டுக்குரியது.

பிரிக்ஸ் உச்சி மாநாடு தளத்தில் ராமேஸ்வரம் இடம்பெற்றிருப்பது, இந்தியாவின் எதிர்காலப் பயணம் அதன் அழியாத நாகரிகப் பாரம்பரியத்தின் வலுவான அடித்தளத்தில் தொடர்கிறது என்பதை உலகிற்கு உணர்த்துகிறது.

நமது பாரம்பரியமே நமது வலிமை; நமது நாகரிக மரபே நமது நிலையானஅடையாளம்"

.......................................................................................................................................

மக்கள் மாளிகை, சென்னை-22 வெளியீடு-
நாள்: 12.09.2026 மக்கள் தொடர்பு அலுவலகம்